
# சுடர்

73

• மாத இதழ் • 80 காசு • மார்ச் '87

ஒலிம்பிக்கில்
அங்கீகாரம் பெறத்
தகுதியற்ற கிரிக்கெட்டிற்கு
மக்களும், அரசும்
அர்த்தமில்லா
அதிக ஆர்வம் காட்டுவது
'விரலுக்குத் தகாத'
வீக்கமல்லவா!?

இலவச அறிமுக இதழ்




FREE E - BOOKS , www.thamizham.net.,

## முன்னாள் மன்னர்கள் சொத்துவரி வருமானவரி பாக்கி

ரூ. லட்சத்தில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜெகத் சிங் | - 161 | எஸ். டி. ஐடிஜியா | - 111 | மிர்பர்கத் அலிகான் | - 52 |
| ஜெய்சிங் | - 150 | மகாராஜா மார்டன் சிங் | - 15 | நிஜாம் டிரஸ்ட் | - 16 |
| ராஜமாத காயத்திரி தேவி | - 121 | விக்ரம் சிங்ஜி சொத்துவரி | - 25 | மாதவ ராவ் சிந்தியா | - 20 |
| பிரதிவி ராஜ் | - 14 | டாக்டர் கரன்சிங் | - 105 | ஜெ, எம் சிந்தியா | - 21 |
| எப். பி. ஹேச் வாத் | - 523 | மிர் பர்கத் அலிகான் | - 626 | பவானி சிங் | - 68 |
| எச். எச். ஹாஜ் சிங் | - 62 | மிர் உஸ்மான் அலிகான் | - 27 | காய்த்திரி தேவி | - 98 |
| ஜெ. சி. வாடியர் | - 108 | ஜெ எம். சிந்தியா | - 17 | பிரதிவி ராஜ் | - 58 |
| எஸ். டி. ஜெடிஜா | - 131 | பாவானி சிங் | - 176 | ஜெகத் சிங் | - 69 |
| கர்னல் ஹரிந்தர் சிங் பிரார் | - 58 | மான் சிங் | - 134 | ஜெய்சிங்ஜி | - 62 |

மேலும் எக்ஸைஸ் வரிச்சட்டத்தை மீறிய 12 ஏகபோக குடும்பங்கள்: பிர்லா, டாடா, சிங்கானியா, சாராபாய், தாபார், மோடி, பாங்கூர், லார்சான் ரூப்ரோ, பஜாஜ், ஐசிஐ, வால்சந்த், டிஐசி.

இப்படி... லட்சக்கணக்கில் இருக்கும் வரிபாக்கியை வசூலிக்காமல் அரசு விட்டு விடுகிறது. ஆனால் ஏழைகள் வாங்கிய ரூ. 300 கடனுக்காக வீட்டையே பறிமுதல் செய்து விடுகிறது.


FREE E - BOOKS , www.thamizham.net.,



நகர்புற ஏழைகளின் உறைவிடம் எது?

பிளாட்பாரம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,




— சுபவீ

இதழ் தொடங்கப்பட்ட 1926 ஆம் ஆண்டிலிருந்து, தொடர்ந்து 61 ஆண்டுகளாய் தரம் குறையாமல் ஒரு பத்திரிகையை நடத்த முடியுமென்பது இமாலயச் சாதனை என்றால், அந்தச் சாதனையைப் புரிந்துள்ளமைக்காக 'ஆனந்த விகடனை' நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

60 ஆண்டுகளுக்கு முன்பே, கனமான-தரமான இலக்கியக் கட்டுரைகளை விகடனில் பார்க்க முடிந்த போது, வியப்பு விழிகளில் விரிந்தது.

12-02-1931 ஆம் நாளிட்ட ஆனந்த விகடனில், "எனக்குப் பிடித்த பிரசங்கிகள்" என்னும் தலைப்பில் (பக். 59-62) கல்கி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அது ஒரு தொடர் கட்டுரை. ஒவ்வொரு இதழிலும் ஒரு 'பிரசங்கி'யைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இதழில் கல்கி, பெரியாரைப் பற்றி எழுதியுள்ளார்.

அடுக்குத் தொடர்களோ, எதுகை மோனையோ, ஆடம்பரமோ எதுவுமேயில்லாத பெரியார் பேச்சில் ஆழமும், அழகும் இருப்பதாய் எழுதுகிறார். தனக்குப் பிடித்த பிரசங்கிகளிலேயே முதல் தரமானவர் ஈ. வெ. ராமசாமிதான் என்று கல்கி குறிப்பிட்டுள்ளார்.

பெரியார் பேச்சு, தன்னைக் கவர்ந்தமைக்கு இரண்டு காரணங்களைக் கல்கி கூறுகிறார். ஒன்று துணிச்சலாய் உண்மைகளைச் சொல்லும் விதம். இன்னொன்று எல்லோருக்கும் புரிகிற மாதிரியான எளிய உவமைகள்.

பெரியார் பேச்சைப் பற்றிய நுட்பமான ஆய்வாக இது படுகிறது. மேலும், கட்டுரையின் கடைசிப் பகுதியில் வடநாட்டில் யார் பேச்சோடும் பெரியார் பேச்சை ஒப்பிட முடியுமா என்று கேட்டு, பண்டிட் மதன்மோகன் மாளவியாவோடு ஒப்பிடலாம் என்று கூறுகிறார்.

இதில் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்தக் கட்டுரை வெளியான அந்த நேரத்தில்தான், பெரியார் சுயமரியாதை இயக்கக் கூட்டங்களின் மூலம் →



FREE E - BOOKS , www.thamizham.net.,

## கழைக் கூத்தாடிகள்



கழைக் கூத்தாடிகள் திடீர் திடீரென்று ஆங்காங்கே தற்காலிக சர்க்கஸ் நடத்துகிறார்கள். இவர்கள் மீது நமக்கு பரிதாபமும் கோபமும் கலந்தே வருகின்றன. குடும்ப சகிதமாக இவர்கள் செய்கிற அட்டூழியங்களுக்கு அளவில்லை. தமது குழந்தைகளை, பணம் சம்பாதிப் பதற்கு பரிதாபகர முறையில் பயன்படுத்துகிறார்கள். குழந்தைகளை கயிற்றில் நடக்க வைப்பது. படுக்க வைத்து ஏறி நிற்பது. இரும்பு வளையத்துக்குள் திணிப்பது. படு ஆபாசமாக டான்ஸ் ஆட வைப்பது. —இப்படி ஒரு வகையினர்.

இரண்டாவது சாட்டையால் தன்னை அடித்து கொள்வது. இவர்களது உடம்பு முழுவதும் ரத்தக் கறைகள். நம்மிடமிருக்கிற இரக்க உணர்ச்சியைத் தூண்டி பணம்பறிக்கிற வகை.

மூன்றாவது பாம்பாட்டி. பாம்புக்கும் கீரிக்கும் சண்டை யிடச் செய்வதாக வாக்களிக்கிற ரகம். இவர்களது இலக்கு தாயத்துவிற்பனை. நான்காவது மாட்டை தலையாட்டச் சொல்லி ஜோசியம் கூறுவது. இப்படி எண்ணற்றவை. இந்த தொழில்களில் ஈடுபடுகிறவர்கள் நல்ல உடல்வலிமை உடையவர்கள். இவர்கள் ஏதாவது தொழில் செய்து பிழைக்கலாம். அதனை விடுத்து ஏமாற்று வேலைகள் செய்வதை நாம் கண்டிக்க வேண்டும். இவர்களை வேடிக்கை பார்த்து, உதவிசெய்து ஊக்குவிக்கக் கூடாது. மாற்றுப் பணிகளில் பயன்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

ஸ. ஜெ. சூர்யா.

பார்ப்பனர்களையும், அவர்களின் ஆயுதங்களாகப் பயன் பட்ட பத்திரிகைகளையும் மிகக் கடுமையாகத் தாக்கி வந்தார். ஆனாலும், அதை ஒரு புறத்தில் வைத்துவிட்டு கல்கியும், ஆனந்த விகடனும், பெரியாரைப் பாராட்டி யிருப்பதில், பத்திரிகை ஆரோக்கியத்தை நம்மால் பார்க்க முடிகிறது.

பெரியாரிடத்திலும், தொடக்க காலந்தொட்டே, இந்த நாகரிகம் இருந்து வந்திருக்கிறது. அவருக்கு விரோதி பார்ப்பனீயமே தவிர, பார்ப்பனர்கள் இல்லை என்பதை திரு பி. ராமமூர்த்தியும் தன் நூலொன்றில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். ●●●



FREE E - BOOKS , www.thamizham.net.,

# மொழி சமத்துவம்

★ 1951-ல் வகுத்து நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டத்திலேயே இந்தி ஆதிக்கத்துக்கு சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டு விட்டது. இந்தி மட்டுமே ஆட்சி மொழி ஆங்கிலம் துணை ஆட்சிமொழி என பிரகடனம் செய்யப்பட்டு விட்டதால் மற்றமொழி பேசும் மக்கள் இரண்டாம்தர குடிமக்களாக்கப்பட்டனர்.

★ இப்போது இந்தியை பரப்புவதற்கு கோடிகோடியாய் செலவிடப்படுகிறது. இதன் நோக்கம் ஆங்கிலம் அகற்றப்பட்டு இந்தி மட்டுமே ஒரே ஆட்சி மொழி என நிறுவுவதற்காகத்தான்.

★ இந்திக்கு இன்று வழங்கப்பட்டிருக்கும் பொதுமொழி அந்தஸ்து அரசியலமைப்புச் சட்டத்தால் திணிக்கப்பட்டது. மக்களின் விருப்பம், தேவைகளிலிருந்து உருவானதல்ல.


★ நமது நாட்டில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 30 சதவிகிதம் மட்டுமே. எனவே,

★ 'இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக நீடிக்கும்' - இது நேரு 1959-ல் இந்தி பேசாத மக்களுக்கு வழங்கிய உறுதிமொழி. இந்திதான் ஆட்சிமொழி என்று அரசியல் சட்டம் கூறுவதை நேருவின் உறுதி மொழி மறுக்கவில்லை. இதை அரசியல் சட்டத்தில் சேர்ப்பதன்மூலம் இந்தித் திணிப்பைத் தடுக்கமுடியும் என்று திராவிட கட்சிகள் கருதுகின்றன. தமிழ் மக்களின் கடந்த 40 ஆண்டுகால இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் கூர்மையடையாததற்கு இதுதான் காரணம்.

'இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய இன மொழிகளும் சம உரிமையும், சம அந்தஸ்தும் பெறவேண்டும். இந்தி பேசாத மக்கள் இரண்டாம்தர குடிமக்கள் என்ற நிலையிலிருந்து விடுபடவேண்டும். இந்தி ஆதிக்கத்திற்கு வழி வகுக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவு 17 ரத்து செய்யப்படவேண்டும்' — இவற்றை சாதிப்பதற்கான போராட்டமாகத்தான் இந்தி ஆதிக்க எதிர்ப்பு கட்டமைக்கப்பட வேண்டும்.



FREE E - BOOKS , www.thamizham.net.,




சென்னை தொலைக்காட்சியில் கடந்த ஆண்டில் மட்டும் 3700 நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டதாகவும், அதில் 2400 நிகழ்ச்சிகள் தாங்களே தயாரித்தவை என்று தொலைக்காட்சி நிலைய இயக்குநர்கள் பீற்றிக்கொண்டு உள்ளனர்.

விளையாட்டு நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்வதற்காக பல நிகழ்ச்சிகளை ஒதுக்கி விட்டு, ஒளிபரப்பி, பின் மற்ற நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பி 9-00 மணிக்கு டெல்லிக்கு விட்டுவிடுகிறோம் என்று பெருமையோடு குறிப்பிடுகின்றனர் தொலைக்காட்சி நிலையத்தினர். தினசரி இரவு 9-00 மணிமுதல் டெல்லி (இந்தி) நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதோடு, விடுமுறையான ஞாயிறு தினமும் காலை 10-00 மணிமுதல் மாலை வரையிலும் டெல்லி நிகழ்ச்சிகள் தான் ஒளிபரப்பப்படுகின்றன. பெயரென்னவோ சென்னை தொலைக்காட்சி நிலையம் - ஒளிபரப்புவதோ டெல்லி நிகழ்ச்சிகளை!

இலங்கையில் தமிழனை சிங்களன் வெட்டித்தள்ளுவதைத் தடுக்கத் துப்பில்லாத இந்திய அரசு, சிங்கள - இந்திய "கிரிகெட்" போட்டியினை ஒளிபரப்புகிறது. உழைப்பில் பெயர்போன நம்மவர்கள் தமது நேரம், உழைப்பு, மின்சாரம் இவைகளோடு தமது மூளையையும் கரைத்துக் கொள்கிறார்கள்—'கிரிக்கெட்' ஒளிபரப்பைப் பார்ப்பதன் மூலம்!

இடையிடையே அடிக்கடி நம் பிரதமரை "ஹீரோ"வாகச் சித்தரிக்கும் செய்திப்படங்களை ஒளிபரப்பி மத்திய அரசின்... இல்லையில்லை ராஜீவ்காந்தியின் செல்லப் பிள்ளையாக உழைக்கும் சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குனர்களே உங்களுக்கு நோபல் பரிசுகூட கொடுக்கலாம்... போங்கள்! — இராஜாதி.



FREE E - BOOKS , www.thamizham.net.,




ரூ. 5000/-

1 "உன்னுடைய அழகுக்குக் காரணம் முடிதான், இல்லையா?"

"நீ எந்த தேங்காய் எண்ணெய் யூஸ் பன்ற...?" — இப்படி தோழிகள் அடிக்கடி புவனாவை கேள்விகளின் மூலம் புகழ்வார்கள். நீண்ட அடர்த்தியான கூந்தல் புவனாவுக்கு. அவளுக்கு வயது 13 இருக்கலாம். வசந்தத்தின் வாயிற்படியில் அமர்ந்திருப்பவள். நாளை பள்ளி இறுதிநாள். அவளது பள்ளியில் அழகிப் போட்டி உண்டு. புவனா கலந்து கொள்கிறாள். இது தெரிந்ததும் பல பெண்கள் அவசர அவசரமாக வாபஸ் வாங்கிக் கொண்டார்கள்.

பள்ளி பரபரப்பாக இருந்தது. ஒரு மெலிதான 2 பவுடர் வாசனை பரவியிருந்தது. நிறைய போட்டிகள் நிகழ்ந்தன. அழகிப் போட்டி என்பது முட்டாள்தனமானது. ஒன்று அழகா இல்லையா என்பதை சில கண்கள் தீர்மானித்துவிட முடியாது. இந்தப் போட்டியின் மூலம் மாணவிகள் மத்தியில் பொறாமை, தாழ்வு மனப்பான்மை ஏற்படுகின்றன. இவற்றையெல்லாம் பள்ளி நிர்வாகம் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை.

இந்த வருடத்திய அழகி என்று புவனா தேர்ந்தெடுக்கப் பட்டாள்.

கைத்தட்டல். ஆரவாரம்.

3 புவனாவின் வீட்டில் அவளது அப்பா மகிழ்ச்சியோடு இருந்தார். வேகமாக வந்த புவனா வீட்டிற்குள் ஓடி அப்பாவைக் கட்டிக் கொண்டாள்.

"அப்பா, இந்த வருசமும் அழகிப் போட்டியில் நான்தான் ஃபர்ஸ்ட் பிரைஸ்-இதோ பாரு பரிசு..."

கையிலிருந்த பரிசுக் கோப்பையைக் காட்டினாள். அம்மாவோ பூரித்துப்போனாள்.


"சரி...சரி...புவனா, இன்னைக்கு சீக்கிரம் படு; நாளை காலை நாம் திருப்பதிக்குப் போறோம்..."

"ஏன்"

"லாட்டரி சீட்ல எனக்கு 5000 விழுந்திருக்கு. லாட்டரியில் பணம் விழுந்தா உனக்கு மொட்டையடிக்கிறதா வேண்டியிருக்கேன்." —நா. தென்னிலவன்



FREE E - BOOKS , www.thamizham.net.,




ஆசிரியர்: [illegible] வெளியிடுபவர்: [illegible] அச்சிடுபவர்: எஸ். எம். ரவீந்திரன் [illegible] 137, [illegible] சென்னை-600 005; [illegible] 1494, அண்ணா நகர், சென்னை-40.

FREE E - BOOKS , www.thamizham.net.,

★ சத்துணவு சாப்பிட்ட
145 மாணவர்கள் மயக்கமாம்!
சத்துணவுக்கும் சாராயத்துக்கும்
சம்பந்தம் இல்லையா என்ன?

○ இந்தியாவில் நிலவும் அமைதி பற்றி
பிரதமர் உரை:
குண்டு துளைக்காத மேடையில் இருந்து.

● தலைவர் தம் செயலரிடம் சொன்னார்:
''நம் தொண்டர்கள்
அகிம்சையைக்
கடைபிடித்துதான் ஆகவேண்டும்.
இல்லையேல் உதைப்போம்!''

? சமீபகால சம்பவங்களால்
பெறப்படும் நீதி?

! சட்டத்தை
யார் வேண்டுமானாலும் மீறலாம்,
ஆனால்
எரிக்கத்தான் கூடாது!

❋ சாலை சுத்தமாக
இருப்பதைக் கண்ட
ஒருவன் கேட்டான்:
''இந்தப் பக்கம்
எந்த மந்திரி சார்
வரப்போறார்?''

கவிதைகள்


"கட்டி" பற்றிய அறிக்கை
4-வது பாரம் (8 வது பிரிவுப்படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | 1494 - அண்ணா நகர் சென்னை-600 040. |
| 2. வெளியிடும் காலம் | : | மாதமொருமுறை |
| 3. அச்சிடுபவர் | : | எஸ். எம். ரவீந்திரன் |
| தேசிய இனம் | : | இந்தியர் |
| 4. வெளியிடுபவர் | : | இ. ராமச்சந்திரன் |
| தேசிய இனம் | : | இந்தியர் |
| 5. ஆசிரியர் | : | கு. நாராயண பாரதி |
| தேசிய இனம் | : | இந்தியர் |
| *முகவரி | : | 1494 - அண்ணா நகர், சென்னை-600 040. |

6. பத்திரிகையின் சொந்த முதலீட்டில் 1க்கு மேல் பங்குடையோர், உரிமை உடையோர் பெயரும், முகவரியும்: கே. என். கமலா, ஜெயஹநுமான் அச்சகம், சென்னை-600 053 நிர்வாக கர்த்தர், 1494- அண்ணா நகர் சென்னை-600 040.

இ. ராமச்சந்திரன் ஆகிய நான் மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கும், நம்பிக்கைக்கும் தெரிந்தவரை உண்மை என இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒப்பம்) இ. ராமச்சந்திரன், வெளியிடுவோர்.




FREE E - BOOKS , www.thamizham.net.,

'இன்று இந்தியா பத்திரிகைத் துறையில் மாபெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. இது மக்கள் கருத்து வளர்ச்சியின் உன்னத சாதனம்' என்று வாய்கிழியப் பேசப்படுகிறது. அரசையே மாற்றக்கூடிய அற்புத சாதனம் எனப்புகழப்படுகின்றது. உலகில் உள்ள மிகப்பெரிய 100 நாளிதழ்களில் இந்தியன் எக்ஸ் பிரஸ், இந்து, டைமஸ் ஆப் இந்தியா போன்ற இந்திய பத்திரிகைகள் இடம் பெற்றுள்ளன.

நமது மக்கள் தொகையில் 2 சதவித மக்களுக்குத்தான் ஆங்கிலம் தெரியும். மீதமுள்ள 98 சதவித மக்கள் (இதில் 80 சதவிதம் கிராம மக்கள்) இந்த பத்திரிகை களைக் கண்டறியாதவர்கள். ஆங்கிலம் தவிர மற்ற மொழிப் பத்திரிகைகள் கிராமங்களை சென்று சேர் வதில்லை. அப்படியே செல்லுகின்ற பத்திரிகைகளின் செய்திகளுக்கும் கிராம மக்களுக்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை.

# கிராமங்களை எட்டாத பத்திரிகைகள்!



இந்த பத்திரிகைகள் இந்திய பொருளாதாரத்தில் 50 சதவிதம் மேலே வருமானம் தரும் விவசாயம் பற்றிய செய்திகளுக்கு தரும் முக்கியத்துவம் மிகக் குறைவு. பெரும் பத்திரிகை நிருபர்கள் பெரும்பாலும் ஆங்கிலம் படித்த உயர் நடுத்தர குடும்பத்தை சார்ந்தவர்கள். சில பத்திரிகை நிருபர்கள் ஆர்வம் காட்டினாலும் நசுக்கப்படுகின்றனர்.

எனவே பத்திரிகைகள் கிராமங்களை சென்றடைய வேண்டுமானால் கிராமப்புற படித்தவர்களுக்கு பத்திரிகைத் துறையில் பயிற்சியளிக்க வேண்டும். கிராம கல்வியறிவு, நூலகங்களில் கவனம் செலுத்த வேண்டும். சுவரொட்டி பத்திரிகைகள் பரவலாக்கப் பட வேண்டும். கேலிச் சித்திரங்கள், துணுக்குகள், கிராமியச் செய்திகளைப் பிரதானப்படுத்தும் இப் பத்திரிகைகள், கிராம மக்கள் அரசியல் மற்றும் சமூக அறிவு பெற பெருமளவில் உறுதுணை புரியும்.

கி. நடராஜன்.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுந்தர ராமசாமி



**அண்மையில் வந்த புது இதழ்களில்**
**தங்கள் பார்வையைக் கவர்ந்தவை எவை? ஏன்?**

அண்மையில் வெளி வந்த புது இதழ்களில் 'புதுயுகம பிறக்கிறது', 'இனி' இரண்டும் என் பார்வையைக் கவர்ந்தவை.

இரண்டு பத்திரிகைகளுமே வணிக உலகத்துக்கு அப்பாற்பட்ட ஆரோக்கியமான கலாச்சாரத்தை தமிழ் வாழ்வில் உருவாக்க முயலுகின்றன. இது ஒரு எதிர் நீச்சல். இன்று வரையிலும் 'புதுயுகம்' ஒரு இதழும் 'இனி' ஆறு இதழ்களும் வெளிவந்துள்ளன. தமிழ்ப் பத்திரிகைகள் மரபில் வாழ்க்கைப் பிரச்சினைகள் சார்ந்து காட்சிப் பரிமாணங்களை உருவாக்குவதில் புதுயுகம் முதல் இதழிலேயே வெற்றி பெற்றிருக்கிறது. மீனவர் வாழ்க்கை பற்றிய கட்டுரையும், அத்துடன் வெளியிடப் பட்டிருக்கும் புகைப்படங்களும், வ்ான்காக் எழுதியுள்ள கடிதமும், படங்களும் உதாரணங்கள். இளங்கவிஞர் நா. சுகுமாரனின் கவிதைகளையும் காட்சிப் பரிமாணங் களோடு, எண்ணிக்கையில் இவ்வளவு அதிகமாகத் தந்திருப்பது, வளர்ந்து வரும் தலைமுறைக்கு அளிக்கும் மரியாதை போல் அமைந்திருக்கிறது.





'இனி' ஆறு இதழ்கள் குறிப்பிட்ட தேதியில் வந்து, முழு வாழ்வின் மீது அப்பத்திரிகை கொண்டுள்ள அக்கறையைச் சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்தி யிருக்கிறது. படைப்புகள், மொழி பெயர்ப்புக்கள், புதிய ஓவியங்கள், விஞ்ஞானம், நவீன சினிமா, மதிப்புரைகள், புகைப்படங்கள், சுற்றுச்சூழல் போன்ற பல விஷயங் களில் அது தன் கவனத்தைச் செலுத்தியிருக்கிறது. மிகுந்த சிரத்தையுடன் படிக்க வேண்டிய விஷய கனம் கொண்ட

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தனியொரு மனிதனுக்கு...



டெல்லியில் நடந்த பாரதி சிலை திறப்பு விழாவில் நமது குடியரசு துணைத்தலைவர் திரு வெங்கட்ராமன் அவர்கள் "தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை என்றால் இந்த உலகத்தை அழித்துவிடுவோம்" என்று பாரதி சொல்லியிருப்பதாக ஒரு புதிய செய்தியை (ஆங்கிலத்தில்) நாட்டு மக்களுக்கு தந்து அருளினார்கள்.

இதுபோன்ற புரட்சிகரமான கருத்துக்களை மேடைகளில் நம் அரசியல் வாதிகள் அடிக்கடி பயன்படுத்தி மக்களை அழகாய் ஏமாற்றி வருகிறார்கள். அண்ணா சொன்னார், பெரியார் சொன்னார், காந்தி சொன்னார் என்று சொல்லிவிட்டு மறுநாளே இதற்கு நேர்மாறாக நடப்பதை நாம் தினமும் பார்க்கிறோம். பிற்போக்குத்தனமான கொள்கைகளையும் போலியான சட்டங்களையுமே தீட்டி தீட்டி பழகிப் போன இவர்கள் மேடைகளில் வீர முழக்கமிடுவதற்குமட்டும் வெட்கப் படுவதேயில்லை! உண்மையாகவே பட்டினிகிடப்பவன் சிந்தனை செய்து போராடவேண்டுமென்று தெருவுக்கு வந்து "ஊரையழிப்போம், இந்த உலகத்தையழிப்போம்" என்றால் சும்மா விட்டுவிடுவார்களா? வெறும் காகிதத்தை எரித்தற்கே உள்ளே தள்ளிவிட்டார்களே! பாரதி நொந்துபோய் சொன்ன வார்த்தைகள் எலலாம் இப்போது ஆடம்பரமான மேடைகளில் உல்லாசமாக சொல்லி மகிழப்படுகிறது. நமக்கு போதிய கல்வியறிவும் சிந்திக்கும் ஆற்றலும் இல்லாமல் போய்விட்டதால் இதுபோன்ற வேடிக்கைகள் தொடர்ந்து நடை பெறுகின்றன. என் என்றால் ஜனநாயகத்தை காப்பற்றவேண்டாமா?

● பூங்கணியன்


---

பத்திரிகை. நவீனத் தமிழ் சினிமா பற்றி இப்பத்திரிகையில் வெளி வந்துள்ள விமர்சனங்கள் மிக முக்கியமானவை. ஜான் ஐசக் என்னும் புகைப்படக் கலைஞரை அறிமுகப்படுத்தி அவரது மிகச் சிறந்த புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளது. அத்துடன் சிறந்த புத்தகங்களை வாசகர்களின் கவனத்துக்கொண்டு வருவதில் மிகுந்த சிரத்தை காட்டும் பத்திரிகை.

இவ்விரண்டு பத்திரிகைகளுக்கும் தமிழ் வாசகர்கள் மிகுந்த ஆதரவு அளிக்க வேண்டும், ●

FREE E - BOOKS , www.thamizham.net.,

# எழுத்து வந்தவை



**இந்தி ஆதிக்கத்தை ஒழிக்க அனைத்து மொழிகளும் சமத்துவம் பெற இறுதிவரை போராடுவோம்!** — வெளியீடு : இந்திய பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) தமிழ்நாடு அமைப்புக் கமிட்டி, விலை : நன்கொடை 50 காசு. முகவரி : குறிப்பிடப்படவில்லை.

**புதிய ஜனநாயகப்] புரட்சியும் மக்கள் கலாச்சாரமும்,** வெளியீடு : மக்கள் கலாச்சாரக் கழகம், தமிழ்நாடு — தொடர்புக்கு : த. பெ. எண். 2484, சென்னை-600 029 விலை ரூ. 1-50.

**காந்த விச்சு** — மாத இதழ் - ஆசிரியர் ப. கணேசன், முகவரி : 33, தெற்கு ரத விதி, வடிவிஸ்வரம், நாகர் கோவில் - தனியிதழ் விலை : குறிப்பிட வில்லை. ஆண்டுக் கட்டணம் ரூ. 15-00.

**விஷங்களை நீக்கும் வீரிய மருந்துகள்** (3-00) — கே. எஸ். லட்சுமணன் - M/s. தமிழ்நாடு பதிப்பகம், 36/3: சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை-600017.

**பெண்ணடிமை விலங்கொடிப்போம்** (2-00) - தமிழகன் - பாட்டாளி பதிப்பகம், கே. குளம், ஈரோடு-638004.

**நிறம் :** நாவல் (14-00) - தேவிப்ரியா - ரசனா புக் ஹவுஸ், 158, சிங்கண்ணத் தெரு, சென்னை-600 002.

**நதி :** கவிதைகள் (5-00) - **வைகறை** - வெளியீடு : பொன்னி, 12, முதல் பிரதான சாலை, நேரு நகர், அடையாறு, சென்னை-600 020.



இந்தியாவில் 27 ஆயிரத்து 204 கோடி ரூபாய் மதிப்புள்ள கரன்சி நோட்டுக்கள் புழக்கத்தில் உள்ளன என்று ரிசர்வ் பாங்க் தெரிவித்துள்ளது. பணப்புழக்கம் சென்ற மாதத்தைவிட இது மிக அதிகமாம். பணப்புழக்கம் அதிகரித்து என்ன பயன்? பணமதிப்பு...?

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பதில்கள்

**இந்தியாவில் மக்களுக்கு உண்மையிலேயே அதிகாரம் இருக்கிறதா?**

பரட்டை: இல்லை. வோட்டுப் போட்டு முடிந்ததும் மக்களுடைய அதிகாரம் போய்விடுகிறது. அதன்பின் அதிகாரம் எம்.எல்.ஏ. எம்.பிக்களுக்கு போய்விடுகிறது. இந்த எம். பி., எம். எல். ஏ.க்களுக்குக் கூட அதிகாரம் இல்லை. கட்சிக் கட்டுப்பாடு என்று கூறி நீதியை எடுத்துச் செல்லாதபடி அவர்கள் தடுக்கப்படுகிறார்கள். இவர்களை கட்சித் தலைவர்கள்தான் வேட்பாளர்களாகத் தெரிவு செய்யும் நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கு அடங்கிப் போக வேண்டியிருக்கிறது.

**நாடகங்கள் சினிமாக்கள் என்ற வெகுஜன தொடர்பு சாதனங்களால சமுதாய மாறுதல்கள் எற்படுமா?**

**கோமல் சாமிநாதன்:** நாடகங்கள் சினிமாக்கள் என்பவற்றின் வலிமையைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. ஆனாலும் சமுதாய மாற்றத்தினை நிர்ணயிக்கின்றதும், நிலை கொள்ள வைப்பதும் அரசியல் ரீதியான நடவடிக்கைகள்தான். இத்தகைய அரசியல் ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கிறபோது அதனோடு சேர்ந்த உந்து சக்தியாக நாடகம், சினிமா ஆகிய கலை சார்ந்த துறைகளும் இணைந்தே இருக்கும். இருக்க வேண்டும்.


**வேல் டைப்பௌண்டரி**

புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
எல்லா மொழி அச்செழுத்துக்கள்,
போஸ்டர் எழுத்துக்கள்
எல்லாவித அச்சக உபகரணங்கள்.

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-7. போன்: 27087.

சுட்டி - தொடர்பு முகவரி
AP - 638, H பிளாக் அண்ணா நகர்,
சென்னை-600 040.




FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது மசாஜ் மருத்துவம்

நூற்றாண்டுகளாக நம் மண்ணில் செழித்திருக்கும் உன்னதமான மசாஜ் சிகிச்சை முறையை அண்மைக் காலத்தில் சிலர் கொச்சைப்படுத்தி தீய நோக்கிற்கு இரையாக்கி வருகின்றனர்!

யாருக்கு மசாஜ் தேவை? உடம்பு தனக்குரிய சக்தியைத் தனது உடல் செயல்பாடுகளால் பெற முடியாதவர்களுக்கே தேவை. மருந்துகளால் நிகழ்த்த முடியாத சிகிச்சையை உடம்பைத் திறம்பட அழுத்துதல், பிசைதல், உருட்டுதல், தேய்த்தல், தட்டுதல் போன்ற செயல்பாடுகளால் நிகழ்த்தலாம்.

நோய் குணப்படுத்தல் என்பதில் அதிர்வுகள் அடங்கியிருக்கின்றன. முறையாக மசாஜ் செய்பவர் சரியான அதிர்வுகளுக்கு உடலை வசப்படுத்துகிறார்.

மூட்டு, நரம்பு, தசை சம்மந்தமான அனைத்து நோய்களும், மலச்சிக்கலும் மசாஜ் மருத்துவத்தால் உதை பட்டோடும்.

மசாஜ் செய்யும் போது அவ்விடங்களில்—

1) வலி, சோர்வு, விறைப்பு இவற்றிற்குக் காரணமாக தசைகளில் தங்கியுள்ள கழிவுப் பொருட்கள் நீங்குகின்றன ['மசாஜ் அற்புதமான வலி நிவாரணி'—கி. மு. 500 இல் இப்போகிரட்டிஸ்]

2) நரம்பு மண்டலம் புத்துணர்ச்சி பெறுகிறது. பரபரப்பு, விறைப்பு, கவலை இவை நீங்கி, நல்ல உறக்கம் ஏற்படுகிறது.

3) இரத்த ஓட்டம் பெருகி, பிராணவாயு திசுக்களுக்கும், செல்களுக்கும் பரவி உற்சாகம் எழுகிறது.

4) 2 டிகிரி செலிருந்து 3 டிகிரி வரை வெப்பம் மிகுந்து, நுரையீரல் சுவாசம் அதிகரிக்கிறது. நிணநீர் தேவையான அளவு சுரக்கிறது.

5) மசாஜ் செய்யப்படாததை விட மசாஜ் செய்யப்பட்ட உடல் உறுப்புக்களில் இளமை செழிப்பைக் காணலாம்.

தூய காற்றோட்டமான இடத்தில் மசாஜ் செய்வதும் சரிவிகித உணவு உண்பதும் விரைவில் பலன் கிட்ட அவசியமாகும்.

மசாஜ் என்பது சோர்ந்தோர்க்கு ஒரு செயற்கை உடற்பயிற்சி. இயற்கையாக செய்யப்படும் உடற்பயிற்சி மாதிரி தசை பெருக்க அல்லது ஊளைச் சதையைக் குறைக்க மசாஜ் உதவாது.

[அடுத்து : நமது மகிழ்ச்சி மருத்துவம்] —சித்தன்



FREE E - BOOKS , www.thamizham.net.,




❋ ஆண்டுதோறும் 2, 50, 000 மக்கள் எலும்புருக்கி நோயால் (டி. பி.) மடிகின்றனர்.

❋ தொழுநோயின் பிடியில் சிக்கியுள்ளவர்கள்: 5 லட்சம் பேர். இது உலகில் உள்ள தொழுநோயாளிகளில் மூன்றில் ஒரு பங்கு.

❋ சுமார் 24 கோடி பேர் மலேரியா, யானைக்கால், கொள்ளை நோய் என அவதிப்படுகின்றனர்.

❋ ஆண்டு தோறும் 40,000 குழந்தைகள் வைட்டமின் 'ஏ' இன்மையால் குருடாகிப் போகின்றன.

❋ 50 சதம் குழந்தைகளும், 65 சதம் பெண்களும் இரும்புச்சத்துக் குறைவால் இரத்த சோகை பீடித்து அவதியுறுகின்றனர்.

❋ ஆண்டுதோறும் பிறக்கிற 230 லட்சம் குழந்தைகளில் 30 லட்சம் குழந்தைகள் ஒரு வருடத்தில் இறந்து விடுகின்றன. மீதி இருப்பவையில் சுமார் 30 லட்சம் 5 வயதுக்குள் இறந்து விடுகின்றன.

❋ இங்கே மனிதனின் சராசரி வயது 52தான். நிகரகுவா, பிரேசில், கென்யா, பர்மா, பெரு போன்ற பின்தங்கிய நாடுகளில் கூட சராசரி வயது:60.

❋ இந்தியாவில் நகர்ப்புறங்களில் 1000 பேருக்கு ஒரு டாக்டர். கிராமப்புறங்களில் 10000 பேருக்கு ஒரு டாக்டர்.

— யூனி செப் என்கிற நிறுவனம் பல்லாண்டுகள் ஆய்வு செய்தது. அது கொடுத்த அபாய அறிவிப்பு என்ன தெரியுமா? உலகம் முழுவதும் தேச ஆரோக்கிய நிலையை ஒப்பிட்டால் படு மோசமாக உள்ளது இந்தியாவில் தானாம். இந்த அபாய அறிவிப்பை நமது அரசு கண்டு கொண்டதா? வழக்கம் போலவே இல்லை.



FREE E - BOOKS , www.thamizham.net.,



# பரிதாபத்துக்குரிய பயணிகள்

மெரீனா கடற்கரை. ஓர் ஆங்கிலேய தம்பதி. அந்தப் பெண் கர்ப்பிணி. அவருக்கு குழந்தைகள் என்றால் பிரியம் போலும். அங்கு மண்ணில் விளையாடிக் கொண்டிருந்த இந்தியக் குழந்தைகளை அழைக்கிறார். கைவசமிருந்த மிட்டாய்களை வழங்குகிறார். குழந்தைகளின் எண்ணிக்கை மிகுதியாகின்றன. கூச்சல், குழப்பம். ஒன்று மிட்டாயைப் பிடுங்குகிறது. மற்றொன்று பணப்பையை அபகரிக்கிறது. அவரது கணவர் செய்வதறியாது தயங்குகிறார். தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடுகிறார்கள்...

—இது வெளிநாட்டுப் பயணிகளுக்கு நம் நாட்டு மக்களிடம் கிடைக்கும் வரவேற்பு. "இந்தியாவில் சுற்று பயணம் மேற்கொள்வது மிகவும் ஆபத்தானது. மக்கள் ஒத்துழைப்பு இல்லை. வேடிக்கைப் பார்க்கும் கூட்டமாகவே உள்ளனர்" - என்று அயல் நாட்டு மக்களிடையே அபிப்ராயம் அதிகரித்து வருகிறது.

பயணிகளை இங்குள்ளவர்கள் மதிப்பதில்லை. வழிகாட்டி என்றுகூறி அழைத்துச் செல்பவர்கள் பணம் பறிப்பவர்களாக உள்ளனர். ஆட்டோ டிரைவர்கள், ஐஸ்கிரீம் விற்பவர்கள் வம்புக்கிழுத்து கொள்ளையடிக்கின்றனர். கல்லூரி மாணவர்கள் மட்டுமென்ன? அவர்களின் கால்குறை ஆங்கிலத்தை வைத்துக்கொண்டு வெளிநாட்டுப் பெண்களை செக்ஸியாக வர்ணிக்கிறார்கள் இங்கு வரும் சுற்றுலா பயணிகள் பெரும்பாலும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மன் ஜனநாயக் குடியரசு, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து வருகின்றனர். 1983-85-ல் இவர்களின் வருகை கணிசமாகக் குறைந்து விட்டது. இதற்கு மேற்கண்ட நமது மக்களின் குணங்களும் காரணமில்லையா?

'வெளிநாட்டுப் பயணியை நண்பராகவும் விருந்தாளியாகவும் வரவேற்போம்' — என்று இந்திரா காந்தியின் தந்தையார் கூறினாராம். மனிதர்களாக மதித்து வரவேற்பதே இங்கு பெரிதாயிற்றே!

—நா. தென்னிலவன்



FREE E - BOOKS , www.thamizham.net.,

11.02.87 அன்றைய செய்தி தாள் களில் எரிச்சல் ஏற்படுத்திய செய்தி

# பெப். 11



**T. ராமமூர்த்தி, சென்னை-600014.**

வருவாய் மீறிய சொத்து வைத்து இருந்ததாக போலீஸ் டி. ஐ. ஜி. கந்தசாமி என்பவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக தினமலரின் 6ம் பக்கத்தில் செய்தி வெளியாகி உள்ளது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல போலீஸ் துறையின் வளர்ச்சிக்கு கந்தசாமி ஓர் உதாரணம். அதிக சொத்துள்ள போலீசார் அனைவரும் செய்யப்படுவாரானால் ஒரு போலீஸ்காரர்கூட பணியில் நீடிக்க முடியாது.

**R. நாகராணி, ஸ்டான்லி பெண்கள் விடுதி, சென்னை-1.**

இந்தியன் எக்ஸ்பிரஸின் செய்தி எரிச்சலை ஏற்படுத்தியது. பிரதமர் ராஜீவ் இராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த நாள் விழாவைத் தொடங்கிவைத்துவிட்டு "நாம் மத அடிப்படையை, எதிர்க்கவேண்டும்" என்று பேசியுள்ளார். மதத் தொடர்புள்ள ஒரு விழாவில் கலந்து கொண்டது ஏன்? இருக்கிற சண்டை போதாதா?

**கதிரவன் சாது சேஷையா நூலகம், கும்பகோணம்—**



தினமணி 2ம் பக்கத்தில் 'பெற்ற மகனை விற்ற அன்னை' என்னும் தலைப்பில் வறுமையைப் போக்க வாடாத முல்லையாம் 'இளந்தளிர்ப் பிள்ளையை விலை பேசிய அன்னையின் கொடுஞ்செயல் எரிச்சலைத் தந்தது. பசிவந்தால் பத்தும் பறக்கும் என்பார்கள். அந்தபத்திலும் பாசம் இடம் பெற வேயில்லை. இச் செயல்கள் தன்னம்பிக்கை இழந்த கோழைத்தனமன்றி, வேறென்ன?



FREE E - BOOKS , www.thamizham.net.,

வாசகர் எதிரொலி

கார்டூனைப் பற்றிப் பாராட்டி வந்த அதே இதழில் கார்டூனைக் காணவில்லையே — **சோலை இசைக்குயில், ஜோலார்பேட்டை.**

நாகை பொன்னி எழுதிய தலைப்பில்லா சிறுகதை வன்முறையைத் தூண்டி விட்டு குளிர்காயும் அரசியல் வாதிகளை அடையாளம் காட்டியது. மணியன் பதில்கள் விமர்சனம் சரியான சாடல். எரிச்சல் ஏற்படுத்திய செய்தி அருமை. — **திருமதி. சுகுணா மதுரை மூர்த்தி.**

கவிதைப் பக்கமும், பதில்கள் பக்கமும் காணாமல் போனது ஏன்? — **இரா. செல்வகுமார், ஒட்டேரி.**

இனவெறிக்கு எதிராக முகம்மது அலி நிகழ்த்திய உரிமைப்போர் வெற்றி தராவிட்டாலும் தனது எதிர்ப்பு உணர்வை காட்டிய விதம் பாராட்டத்தக்கது. வெளி நாடுகளில் தடை செய்யப்பட்ட 'காம்ப்ளான்' விற்பனைக்கு இந்தியாவில் தரப்படுகின்ற விளம்பரம் மக்கள் நலனில் அரசு காட்டும் அக்கறையைக் காட்டு கிறது. — **எம். சம்பத், வேலாயுதம்பாளையம்-639117**

வாசகர் எழுதும் கடிதங்களுக்கு மதிப்புதந்து உடனே நடவடிக்கை எடுக்க உத்தரவு பிறப்பித்திருக்கும் கர்நாடக முதல்வரைப் பாராட்டுகிறேன். — **பி. எல். பரமசிவம், மதுரை-1.**

'தூசிதட்டி வாசித்தவை' பகுதி நிறைய எதிர்பார்க்க வைக்கிறது. 'தமிழ் வேலைக்காரர்களின் மொழியா' கட்டுரையைப் படித்ததும் அதிர்ச்சி அடைந்தேன். 'தமிழினத் தலைவர்கள்' இதற்கு என்ன பதில் தரப்போ கிறார்கள்? — **வா. வி. ரவி, மயிலை, சென்னை-4.**

புத்தகப்பிழிவு இரு நூல்களையும் வாங்கத் தூண்டியது. எமக்கு வந்தவை பகுதியில் இடம் பெறும் இதர நூல் களையும் சுருக்கமாக விமர்சிக்கலாமே! - **லேனா வாணன், ஹைத்ராபாத்.**

தகுந்த நேரத்தில் தலையில் உரைக்கக் குட்டுவதில் சுட்டிக்கு இணையில்லை என்பதை மு. மேத்தாவை விமர்சிப்பதன் மூலம் மீண்டும் நிரூபித்திருக்கிறீர்கள். — **கிங்பெல், பம்பாய்-71.**

சுட்டியில் வெளிவரும் சுந்தர ராமசாமியின் பதில்கள் பற்றி சில வார்த்தைகள் : அவை பொறுப்புணர்ச்சி மிக்க ஒரு கலைஞனின் பிற துறை பற்றிய கவலைகள். தன் துறை பற்றிய ஆதங்கங்கள். ஒரு வரியில் சொன்னால் அவை தமிழ்ச் சமூகத்தின் ஆன்மாவின் குரல். — **பிருந்தா சாரதி, கும்பகோணம்-612001.**



FREE E - BOOKS , www.thamizham.net.,



நெல் விளைச்சலில்
அதிக மகசூல் இந்தியா

வைக் காட்டிலும் சீனா வில் கிடைக்கிறது. இதற்குக் காரணங்கள்: சீரான நில பராமரிப்பு. நவீன விவசாய முறை. நவீன நெல் விதைகள் உபயோகித்தல். உலகில் அனைத்து நாடுகளிலும் 120 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்படுகிறது. இதில் சீனாவும் இந்தியாவும் மூன்றில் ஒரு பங்கு.

ராஜீவ் பேசும் பேச்சுகளில் மணிசங்கர் ஐயர் என்ற பிரமுகர் எழுதிக் கொடுப்பவை அதிகம். ரீகன் உட்பட பல தலைவர்களுக்கு எழுதிக் கொடுப்பவர்கள் உண்டு. ஆனால் இங்கே ஒரு வேடிக்கை என்னவென்றால் பேட்டிக்காக ராஜீவ் பேசும் போதெல்லாம் மணிசங்கர் ஐயர் பக்கத்திலேயே இருந்து கொண்டு ராஜீவ் பேசுவதெல்லாம் சரி என்பது போல தலையாட்டி பாவனை செய்கிறாராம். இது பத்திரிகையாளர்களுக்கு எரிச்சலைத் தருகிறதாம். இதனால் மணிசங்கர் ஐயர் பலமாக ஆட்டம் போடுகிறார் என்பது உண்மை. -ரிஷுல் பரத்.

பாரிஸ் நாட்டில் பிற நாடுகளிலிருந்து தண்ணீர் வாங்கி புட்டிகளில் அடைத்து விற்பனை செய்யப்படுகிறது. 1 பாட்டில் தண்ணீர் இந்திய நாணயப்படி ரூ. 7-60. எச்சரிக்கை: சென்னையில் குடிநீர் பஞ்சம் விரைவில் ஏற்பட உள்ளதாம்.





FREE E - BOOKS , www.thamizham.net.,



# ஒலிம்பிக்

ஒலிம்பிக் போட்டிகள் கி.மு. 9 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியதாக வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். அப்போது கிரீஸில் உள்நாட்டுச் சண்டைகள் இடம்பெற்றன. ஒலிம்பியா நகரத்தை உள்ளடக்கிய சிறு கிரேக்க மாகாணமான எலிஸ் என்ற பகுதியின் மன்னன் இஃபிடியாஸ் தன் சிறு நாட்டின் மக்களைப் போரினின்று பாதுகாப்பது எப்படி என்று யோசனை கேட்பதற்காக டெல்ஃபி நகரிலிருந்த பிரபல குறி சொல்பவனிடம் சென்றான். ஆருடக்காரனோ "தெய்வங்களைத் திருப்திபடுத்தும் வகையில் நீ விளையாட்டுப் போட்டிகளை நடத்துவாயாக" என்று அறிவுரைக் கூறினான். கிரேக்கர்களுடைய அமைதி நாடும் எண்ணங்களின் நினைவாகவும், தெய்வங்களுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் 'ஒலிம்பியா' நகரில் விளையாட்டுப் போட்டிகளைத் தோற்றுவித்தான் இஃபிடியாஸ். இது நடைபெற்ற ஆண்டு கி.மு. 884. ஒலிம்பிக் பந்தயங்கள் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும்.

ஒலிம்பிக் வெறும் விளையாட்டுப் போட்டி அல்ல. இதில் அரசியல் கலப்பு ஏற்பட்டு மாபெரும் குழப்பங்கள், மாபெரும் பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கின்றன. ●

**இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ரூ 32,753 கோடி. ஆண்டுக்குக் கட்ட வேண்டிய வட்டி ரூ 10079 கோடி.**

**— ஜனார்தனன் பூஜாரி**

**'கடனபட்டார் நெஞ்சம் போல் கலங்கவில்லை' இந்திய வேந்தன்.**

திருமணம், சொத்து விவகாரங்கள், உடல் நலப் பிரச்சனைகள், விரிவான ஆலோசனைகள் பெற எழுதவும். ஆலோசனைக் கட்டணம் ரூ. 10-00.

எம். வெங்கட், 27பி, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை-600 053.



FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டி

**சுட்டி சந்தா:** 12 இதழ்களை அஞ்சலில் பெற விரைவில் ரூ. 10.00 பணவிடை செய்யுங்கள்.

**முன் இதழ்கள்:** எண் 1 முதல் 11, 14, 23, 27, 30, 31 தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை அல்லது பணவிடை அனுப்புங்கள். உடனே தபாலில் வந்து சேரும். 50-வது இதழ் 75 காசு.

**சுட்டி இலவசம்:** சுட்டியை அறியாத விரும்பி ஏற்கக்கூடிய நண்பர்கள் உறவினர்களின் முகவரிகளை அனுப்புக. உங்கள் சார்பில் அவர்களுக்கு ஒரு மாதிரி இதழ் அனுப்பப்படும். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

**சுட்டி வரவில்லை:** சுட்டி 10 தேதிக்குள் கிடைக்கப் பெறாத சந்தாதாரர்கள் உடனே எழுதுங்கள். **மீண்டும் அனுப்புகிறோம்** அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. சந்தா எண். குறிப்பிடல் அவசியம்.

**ஏதாவது செய்யுங்கள்:** புதியவர்களை சந்தாதாரராக்குங்கள். அறியாதவர்களுக்கு அறிமுகப் படுத்துங்கள். ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகளை நியமிக்க உதவுங்கள். 10 இதழ்களை வாங்கி நண்பர்களுக்குள் விலைக்கு விற்பனை செய்யுங்கள். வியாபார ஸ்தாபனங்களோடுதொடர்புவைத்து விளம்பரங்கள் வாங்கித் தாருங்கள்.

**சுட்டி இலவச நூலகம்:** அனைவருக்கும் பயன்படக்கூடிய வண்ணம் சுட்டி நூலகம் செயல்பட உள்ளது. படிப்புணர்வை பரவலாக்குவதுதான் அதன் நோக்கம். எனவே, சமூகஅக்கறையுள்ள அனைவரும் நூலகத்தை வளப்படுத்துங்கள். பலரும் பயன்பட நூல்களை அனுப்புங்கள். நூல்களில் அன்பளிப்பு என்று போட்டு பெயரையும் முகவரியையும் எழுதத் தவறாதீர்கள்.

எல்லாத் தொடர்புகளுக்கும்:

**AP 638, அண்ணா நகர், சென்னை-600 040.**

**சுட்டி வாசகர் இயக்கம்:** விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் பட்டு புகைப்படத்தோடுகூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுவிட்டன. உறுப்பினர் ஆனவர்கள், உடனடியாக செயலில் இறங்கவேண்டும்-என்னென்ன செயல்கள் செய்யப்பட்டன என்பதுபற்றி உடனுக்குடன் செய்திகள் அனுப்பப்படவேண்டும். புதிய உறுப்பினர்கள் சேர்ப்புப்பற்றி கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**விண்ணப்பங்கள் தேவைப்படுவோர் அஞ்சலட்டையில் தொடர்பு கொள்ளவும்.**

— வாசகர் இயக்க அமைப்பாளர்



FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண் : TN/MS(N)/317


# சக்தி சுகர்ஸ் லிமிடெட்

# SAKTHI SUGARS LIMITED

## கிராமப்புற வளர்ச்சிக்கு வழி வகுப்பவர்கள்

தமிழ்நாடு பெரியார் மாவட்டத்தில் உள்ள 400 கிராமங்களில் சுமார் 150 லட்சம் மக்களுக்கு உறுதுணையாக சக்தி சுகர்ஸ் லிமிடெட், ஏராளமான கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களை ஏற்று முடித்துள்ளது. பல்வேறு கிராமப்புற வளர்ச்சிப் பணிகளுக்காக சக்தி சுகர்ஸ் ரூ.210 லட்சம் செலவு செய்துள்ளது.

1. சக்திஇன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி

சக்தி நகரில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு (நவீன தொழில் நுட்பக் கல்வி நிலையத்தை) பாலிடெக்னிக் நிறுவி அது 10-9-81 முதல் சக்தி நகரில் செயல்பட்டு வருகின்றது. இந்த கல்வி நிறுவனத்தில் டிப்ளமோ பட்டப் படிப்பு வரை கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 200 லட்சம். வருடம் 200 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

2. சக்தி உயர்நிலைப்பள்ளி, சக்தி ஆரம்ப பள்ளி

சக்தி ஆரம்பப் பள்ளி 1966ம் ஆண்டும் சக்தி உயர் நிலைப்பள்ளி 1970ம் ஆண்டும் நிறுவப்பட்டன, கிராமப் புறத்தின் சுமார் 1100 குழந்தைகள் இந்தப் பள்ளி மூலம் பயன் பெறுகின்றனர். இது ரூ. 30 லட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.

3. வி. எம். கைலாசம் மருத்துவமனை, சக்தி நகர்

கிராமப் பகுதியிலுள்ள மக்களின் சேவையைக் கருத்தில் கொண்டு எக்ஸ்ரே யூனிட்டுகள் மற்றும் ஆப்ரேஷன் தியேட்டர் ஆகிய வசதிகளுடன் கூடிய 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ரூ. 60 லட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.

4. சாலை அபிவிருத்தி திட்டங்கள்

கிராமப் பகுதிகளுக்கும், விளை நிலங்களுக்கும் இடையே சாலைப் போக்குவரத்து ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகள் உரம் மற்றும் விளை பொருட்களை வண்டிகள் மற்றும் லாரிகள் மூலம் எடுத்துச் செல்ல உதவி புரிகின்றது.

தலைமை அலுவலகம் :
180, ரேஸ் கோர்ஸ் ரோடு,
கோயமுத்தூர்-641018.

பதிவு அலுவலகம் &
தொழிற்சாலை
சக்தி நகர்-638 315
ஈரோடு ஆர்.எம்.எஸ்.

ADVT.



http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்களம்

FREE E - BOOKS , www.thamizham.net.,